# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 94/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-2/PW- 5 | Village: | |
| Name | : முனியப்பன் | Age | :61 |
| Father's/Husband's Name | : கோவிந்தசாமி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/01/2023**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி.உஷா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது மேலபிள்ளையாம்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாலுவை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் நடந்தது எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06/07/2014 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் கரிக்குளம் மெயின்ரோட்டில் அ.சா.1 பாலு என்பவர் உறவினர் கண்ணதாசன் தரப்பில்

இருந்த முன்விரோதம் காரணமாக இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், அ.சா.1 குடியிருந்த வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்றும், அ.சா.1 ன் குடியிருந்த வீட்டிற்குள் இருந்த வீட்டு உபயோகப்பொருட்களை உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும், எதிரிகள் அ.சா.1 பாலுவை பார்த்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், இச்சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**